# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233


கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ கார்த்திகை 1981 ★ இதழ் - 71




## மழையைப் பயன்செய்வோம்

வுர்ணபகவான் விண்ணின்று பெய்விக்கும் மழை அமிர்தம். இது கருணையின் வெளிப்பாடு. கருணை மழையைப் போன்றது. கருணை புரிபவனையும் கொள்பவனையும் வாழவைக்கும். மழை உலக மாதாவாய இறைவியின் இன்னருள். இதைப் பெய்விப்பதற்கு இந்திரன், வாயு, வருணன், சூரியன் முதலாய பாலகர்கள் சம்பந்தப்படுகிறுர்கள்.

இலவசமாகக் கிடைக்கும் மழையைத் தேக்கி வைத்தால் நிலம் கூடுதல் பயன் தரும். மழைகாலத்தில் மரம் நாட்டும் பெரும் பணியை வரண்ட பிரதேச வாசிகள் உடனடியாகச் செய்தல்வேண்டும். வற்றி வரண்டுபோகும் எங்கள் பிரதேசத்தில் பசுமை நிலவுவதற்கு மரம் நாட்டுவோம். இவ்வாண்டு மரம் நாட்டும் பணியை மில்க்வைற் தொழிலதிபர் கல்வித் திணைக்களத்தில் மங்கலகரமாக ஆரம்பித்தபோது, கல்விப் பணிப்பாளர்கள் திருவாளர்கள் சிவநாதன் அவர்களும், கொழும்பு சண்முகநாதன் அவர்களும், பிரதம கல்வியதிகாரிகள் சபாநாயகம், ஜனுப் மன்சூர், வட்டாரக் கல்வியதிகாரிகள் எல்லோரும் பக்கபலமாய் உதவினுர்கள். குடாநாடெங்குமுள்ள அன்பர்கள் பலவித மரக் கன்றுகளைத் தந்தார்கள். அவை எம்மிடம் உள்ளவரையில் உங்களுக்கே தருவோம் மரம்நாட்டுங்கள்.



மில்க்வைற் தொழிலதிபர் யாழ். கல்வித் திணைக்கள வளவில் மரம் நாட்டும் பணியை மேற்கொள்ளல்:

★ நஞ்சிலும் பார்க்கக் கெட்டநூல் கொடியது ★

உ
சிவமயம்






## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

### தனித்திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

திருச்சிற்றம்பலம்

இறைவனாகிய எம் பரமபிதாவின் திருவடி நிழல் குற்றமில்லாத வீணையின் நாதமும், மாலைக்காலத்திலே தோன்றும் நிலவின் தன்மையும், மெல்லிதாய் வீசுகின்றதாய தென்றலின் சாயலும், செறிந்த இளவேனிற் பருவத்தின் மாட்சியும், ஒலிக்கும் வண்டினங்கள் மொய்க்கும் பொய்கையின் குளிர்ச்சியும் போன்று இன்பம் பயப்பதாகும்.




## நீத்தார் பெருமை

(உலகப் பற்றினை நீக்கிக் கடவுள் திருவருள் பெற்ற பெரியவர்தம் பெருமை.)

''உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து''

திண்மை என்னும் அங்குசத்தால் ஐம்பொறிகள் என்னும் யானைகளை அடக்கவல்லவன், அஃதாவது ஐம்பொறிகளும் புலன்கள்வழிப்போகாமல் தடுத்து நிறுத்தவல்லவன் மேலான வீட்டு நிலத்தை அடைந்து நிலையாக வாழ்வதற்குரிய விதைபோன்றவனாவன்.

## THE GREATNESS OF ASCETICS

He who with the hook of strong will power checks the five senses is said to be the seed for eternal bliss.

## வஜனாம்ருதம்

(சுவாமி கெங்கானந்தா)

1. தர்மசிந்தனை இல்லாத மக்கள் இருக்குமிடத்தில் எத்தகைய அரசாட்சியும் நிலைத்திருப்பதில்லை.
2. அரசாட்சியைவிட தர்மம் பெரிதென்று மக்கள் நினைக்கும்பொழுதுதான், அரசாட்சி அதன் உண்மையான குறிக்கோளை அடையும்.
3. தர்மத்திற்கு இருக்கும் அதே ஆயுள் அதர்மத்திற்கும் இருக்கின்றது.

## நவம்பர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 8 | ஞாயிறு | — | ஏகாதசி விரதம் |
| 9 | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 10 | செவ்வாய் | — | திருமூலர் குருபூசை |
| 11 | புதன் | — | பூரணை விரதம் |
| 12 | வியாழன் | — | கார்த்திகை விரதம் |
| 16 | திங்கள் | — | தமிழ் கார்த்திகை மாதப் பிறப்பு |
| 19 | வியாழன் | — | ஆறுமுகநாவலர் குருபூசை |
| 22 | ஞாயிறு | — | ஏகாதசி விரதம் |
| 23 | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 26 | வியாழன் | — | அமாவாசை விரதம்<br>சேர். இராமநாதன் தினம் |

## ஓலைச்சார்வு

என்றும் இல்லாத அளவில் இந்தவருடம் அரிவரி ஏடுகள் விநியோகிக்கவேண்டிய நிலை உண்டானது. உடனடியாக ஆயிரம் ஆயிரமாக நாம் ஏடுகள் தயாரிப்பதற்கு வசதியாய் மலிவாய் ஓலைச்சார்வு கொள்வனவு செய்துதந்த கரவெட்டி வேளகவாசர் செவ்வேள் அவர்களுக்கு நன்றி.

★ ★

சமூகத்தொண்டன் ஆசிரியர் கனகநாயகம் அவர்களின் தம்பி சபாநாதன் துணைவிப்பகுதியில் இருந்து எங்கள் பணிக்குப் பக்கபலமாக ஓலைச்சார்வு சேகரித்துத் தந்துள்ளார்.


★ ★

இலங்கையின் பலபாகங்களிலும் எங்கள் ஏடுகளை விநியோகம் செய்வதற்கு உபநிலையங்களாகத் தங்கள் இருப்பிடங்களை உதவிய அன்பர்கள், பெரியவர்கள் சுவாமிகள் அத்தனை பேருக்கும் எங்கள் பாராட்டும் நன்றியும் கடமைப்பாடும் உண்டு.

★ ஒய்வும் லங்கணமும் ஔடதங்களில் சிறந்தவை ★

# ஐம்பத்து நான்கும் முப்பதும்

மில்க்வைற் தொழிலதிபர் 'சிவதர்மவள்ளல்' திரு. க. கனகராசா அவர்களுக்கு 1981ம் ஆண்டில் ஐம்பத்து நான்கு இளமை நல்லாண்டு நடைபெறுகிறது. இதே 1981 இவரின் திருமணவாழ்வில் முப்பதாகின்றது. மங்கலந் திகழ மாங்கல்யம் சூட்டிய தினத்தையும் அதற்கு முன் பிறந்தநாள் மங்கலத்தையும் நினைவுகொள்ளும்வகையில் ஐம்பத்துநான்கும் முப்பதும் என்னும் தலைப்பில் 54 மநுநீதிகளையும் 30 திருவள்ளுவ மணிக்கருத்துக்களையும் இங்கே வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.



## மநுநீதி ஐம்பத்துநான்கு

1. அறத்தின் வழி ஒழுகுதல் போற்றத்தக்கது.
2. பற்றற்றுக் கடமை புரிபவன் புகழ்பெறுகிறான்
3. ஒழுக்கமும் கவலையற்ற மனமும் தர்மத்துக்கு ஆதாரம்
4. அறத்தை அறிய ஆவலும் சிரத்தையும் அவசியம்.
5. தூய்மை இழந்தவர் வேதம் ஓதல் ஆகாது.
6. உண்ணும் உணவைத் தொழுது உண்ணவேண்டும்.
7. ஒருநாளில் இருவேளை உண்ணல் விரும்பத்தக்கது.
8. பெருந்தினியால் நோயும் அகால மரணமும் உண்டாகும்.
9. பெண்களுக்குத் திருமணம் பூணூற்சடங்கு போன்றது.
10. இல்லத்தைக் காத்தல் பெண்களின் குருகுலவாசம்.
11. தூய்மையும் நல்லொழுக்கமும் பேணவேண்டியவை.
12. தூய்மையுடன் அறிவுநூல்களைக் கற்றல்வேண்டும்.
13. அடக்கமாக இருந்துகற்றல் பிரமாஞ்சலி எனப்படும்.
14. கற்பிக்கும் குரு சோம்பலில்லாதவராதல் வேண்டும்.
15. ஓம் என்னும் பிரணவத்தில் அகார உகார மகாரம் உண்டு.
16. பூர்வ, புவ, சுவர் என்பன பூமி, ஆகாசம், சுவர்க்கம்.
17. பிரணவமும் காயத்ரியும் சந்தியா காலங்களுக்கானவை.
18. மந்திரங்களை உச்சரிப்பதால் பாவங்கள் நீங்கும்.
19. ஓம் என்னும் பிரணவம் பரப்பிரம்ம வடிவானது.
20. பொய்பேசாதவன் வாயில் புனிதம் பரிமளிக்கும்.
21. மனத்தை அடக்கினால் பொறிபுலன்கள் அடங்கும்.
22. தேடுவதைவிடத் தியாகஞ்செய்தல் மேலானது.
23. உலக இன்பங்களைத் தெளிந்த ஞானத்தால் அடக்கலாம்.
24. சுகங்களில் நாட்டமுள்ளவன் தவம் பலன்தராது.
25. விரும்பிக்கேளாதவனுக்கு வித்தையால் பயனில்லை.
26. முறைதவறிக் கற்பிப்பவருக்கு ஆயுள் குறையும்.
27. பொறுமையுள்ளவனுக்கு வித்தை கற்பித்தலாகாது.
28. இச்சைகளின் போக்கில் திரிதல் ஆகாது.
29. கண்ட உணவுகளையும் உண்ணல் ஆகாது.
30. பெரியோரை மதியாதவர் ஆயுள் குறையும்
31. வணக்கத்தால் கல்வி புகழ் ஆயுள் பெருகும்.
32. சாத்திரங்களை அறிய உதவி செய்பவர் மதிப்புக்குரிய குரு.
33. அறிவுள்ளவனைத் தந்தை என மதித்தல்வேண்டும்.
34. ஆசிரியனிடம் தாய்மையின் பரிவு இருத்தல் வேண்டும்.
35. துயருற்றபோதும் பிறர்மனம் நோவப் பேசலாகாது.
36. நல்லவரை அவமதித்தவன் தானே அழிவுறுவான்.
37. சூரியன் உதிக்கும்போதும் மறையும்போதும் தூங்கலாகாது.
38. கல்வி, அறம், ஒழுக்கம், நன்மொழி எங்கிருந்தும் பெறலாம்.
39. வறியவராயினும் வாழ்வாங்கு வாழ்பவர் பெரியவர்.
40. தெளிந்த ஞானத்தால் வேள்விப் பயனைப்பெறலாம்
41. பகலில் நன்றாக உண்டால் இரவில் உணவை நீக்கலாம்.
42. இருகரங்களாலும் நீரை அள்ளிப் பருகலாகாது.
43. பல்லால் நகத்தைக் கடித்தல் ஆகாது.
44. எள்ளில் தயாரித்த எதனையும் இரவில் உண்ணல் ஆகாது.
45. இரண்டு கைகளாலும் தலையைச் சொறிதல் ஆகாது.
46. இரவில் நான்காம் சாமத்தில் எழுந்து படித்தல் நல்லது.

(4ம் பக்கம் பார்க்கவும்)

முயற்சியுள்ளவர்கள் படித்தவர்களைவிடப் புகழ்பெறுகிறார்கள்

# புத்தகப் புதினம்

## அறிவுத்துறை

அறிவுத்துறையை மேற்கு நாடுகள் அணுகும் வகைக்கும், கிழக்கு நாடுகள் அணுகும் வகைக்கும் வேறுபாடு அமைந்துள்ளது. கிழக்கு நாடுகளுள் பாரத் என்னும் பழம் பெருமைக்குரிய இந்தியா தன்னேரில்லாதது. இந்தியாவில் தெற்கில் தமிழும் வடக்கில் ஆரியமும் அன்பு மொழியாயும் அறிவு மொழியாயும் அணுகு துறைக்கு வழிகாட்டின. தமிழில் எத்தனை ஆயிரம் வகைப்பட்ட நூல்கள் ஏட்டுருவில் அழிந்தொழிந்தன என்றும் இது வரை எவராலும் எண்ணிக்கொள்ள முடியவில்லை.

மேற்கு நாடுகளில் சோக்கிரடீஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில், லியனுடோ டாவின்சி, சேக்ஸ்பியர், மில்ரன், டாவின், காள் மாக்ஸ், எயின்ஸ்ரீன் முதலான மூளைகள் அறிவுத்துறைக்கு வழியமைத்தனர். அங்கேயும் அறிவு பென்னம் பெரிய பாரிய மரமாக முளைத்தெழுந்து கிளைகளாய்க் கொம்பர்களாய்ப் படர்ந்து அடர்ந்து வளர்ந்து விசாலித்துப் பரந்துள்ளது.

சமுதாய வாழ்வுக்கும் அதன் வாழ்வுமுறை அநுட்டானங்களுக்கும் அறிவு தேவை. இயற்கையாயுள்ள அறிவைத் தீட்டி ஒளியூட்டுவதற்கு அறிவு நூல்கள் பயன் தருகின்றன. கலைத்துறை, விஞ்ஞானத்துறை, பண்பாட்டுத்துறை என்றெல்லாம் பிரிந்த அறிவுப்பாதை மேலும் பல கிளைப் பாதைகளாய்ப் பிரிந்து நூற்றுக்கணக்கான துறைகளாய் மலர்ந்து காய்த்துக் கனிந்துள்ளன. சமுதாயவியல், பொருளியல், வானியல், கணிதவியல், பொறியியல், உயிரியல், உடலியல், தாவரவியல், குடியியல், புவியியல், விலங்கியல் முதலியன ஒருபாலுள்ளன. இன்னொருபால் இயல் இசை நாடகம், தத்துவம் மெய்யியல், நலவியல், வாழ்வியல் முதலியன கனிந்துள்ளன. இங்ஙனம் கனிந்த துறைகளை முற்றாக முழுவதாகக் கற்றுச் சுவைக்க மனிதனால் ஒருபிறப்பின் வாழ்நாளில் முடியாது.

## மன்னார் மருத்துவ மனையினர் பாராட்டு

மன்னார் மருத்துவமனையின் நலன்புரிச் சங்கம், வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், வைத்தியசாலை இந்து பரிபாலன சங்கம் என்னும் சங்கங்கள் ஒருமுகமாகத் தொழிலதிபர் கனகராசா அவர்களைப் பாராட்டியுள்ளார்கள். சென்ற மாதம் மன்னார் செயலகத்தில் நடைபெற்ற பணிச்சபைக் கூட்டத்திற் சமுகமளித்த இயக்குநர் கனகராசா அவர்களுக்குக் கிடைத்த எலவன்ஸ் பணத்தை அவர் மன்னார் மருத்துவமனைக்குத் திருப்பிவிட்டார். பணி செய்ய வசதி செய்த வைத்திய அதிகாரி இ. குமரப்பபிள்ளை அவர்களுக்கு நன்றி.

## நயகரா நீர்வீழ்ச்சி

அமெரிக்க கனேடிய எல்லைப் புறத்தில் அற்புதமான அழகிய நீர்வீழ்ச்சி நிமிடந்தோறும் 50000 தொன் நீரைக் கொட்டுகிறது.

## சூரியன்

பெரிய அண்டத்துக்கே மையமாகவுள்ள சூரியன் ஒரு நட்சத்திரம். ஆனால் அதைவிட மிகப்பெரிய நட்சத்திரங்களும் உள்ளன. அவற்றுள் பீட்டில்கீஸ் என்னும் நட்சத்திரம் சூரியனைவிட 450 மடங்கு பெரியது.

## ஐம்பத்து நான்கும் முப்பதும்


(3-ம் பக்கத் தொடர்ச்சி)

47. சாப்பிட்டபின் நீராடுதலாகாது.
48. பிறர்மனைவியைக் கூடுதலால் ஆயுள் குறையும்.
49. போனசெல்வத்தை நினைத்துக் கவலைகொள்ளல் ஆகாது.
50. பொய்சொல்லிப் பொருளீட்டியவன் உய்யமாட்டான்.
51. கோணல்புத்தி, வஞ்சகம் என்பன தனக்கே கேடு தருவன.
52. பாசாங்குக்காரன் பாவத்துக்குப் பிராயச்சித்தம் கிடையாது.
53. மரியாதையுடன் தானம் கொடுத்தல் ஏற்றல் நன்மை தரும்.
54. விறகுக்காகப் பச்சைமரத்தை வெட்டுதல் பாவம்.

## திருவள்ளுவ மணிகள் முப்பது

1. இல்லறத்தான் என்பான் பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி என்பாருக்குத் துணையாவான்.
2. கதியற்றவர்க்கும், வறிஞர்க்கும், இறந்தவர்க்கும் இல்வாழ்வான் ஏற்ற துணையாவான்.
3. இல்லறத்தான் பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவரையும் போற்றுதல் சிறந்ததாம்.
4. பாவத்திற்கு அஞ்சிப் பொருள் தேடிப் பங்கிட்டு உண்பவன் சந்ததி இல்லாமற் போவதில்லை.
5. இல்வாழ்க்கைக்கு அன்புடைமை குணம் என்றும், அறமுடைமை பயன் என்றுங் கொள்வர்.
6. இல்லறத்தை அறநெறியில் நடத்தினால் போதும்; துறவறத்திற் சென்று பெறும் பயன் வேறில்லை.
7. இல்வாழ்க்கையை நெறிப்படி நடத்துபவன் முத்தி பெற முயல்பவரிலும் மேலானவன்.
8. மற்றவர்களையும் நல்வழிப்படுத்தித் தானும் அறநெறியிற் செல்லும் இல்லறத்தானின் நிலை, தவத்தோர் நிலையிலும் வலிமையுடையது.
9. பிறரால் பழிக்கப்படாது அமையுமானால் இல்வாழ்க்கையே சிறந்த அறமாகும்.
10. முறைப்படி இல்வாழ்க்கை நடத்துபவன் பூவுலகத்து வனாயினும் தேவருலகத்தவருள் ஒருவனாக மதிக்கப் பெறுவான்.
11. இல்லறத்திற்கு அமைவான குணமும் செயலும், கணவன் வரவுக்குத்தக்க வாழ்வும் உடையவளே வாழ்க்கைத் துணையாவாள். (11-ஆம் பக்கம் பார்க்க)

★ படிப்பில்லாதவர் பேசாமல் இருந்தால் மதிப்புப் பெறுவர் ★



## பஞ்சதந்திரம்

பிறவி எடுத்த உடம்பைப் பல ஆபத்துக்கள் சூழ்கின்றன. சம்பத்து எப்பொழுதும் விபத்து உண்டாக்கும் பந்தபாசங்கள் எல்லாம் ஈற்றில் பிரிவில் முடிகின்றன. உலகமே இறுதியில் பொடிப்பொடியாய்ப் போகிற ஒரு பொருள்தான்.

துன்பத்தையும் துயரத்தையும் பயத்தையும் போக்கி நம்பிக்கைக்கும் அன்புக்கும் உறைவிடமாயிருப்பவன் நண்பன். அவன் மித்ரஹ என்னும் எழுத்துக்களாலான இரத்தினம்.

நல்லோர் சேர்க்கையில் வளர்வது நட்பு. ஒவ்வொரு மூச்சிழையிலும் அது அன்பு பொழிகிறது. அது அன்புக் கயிற்றால் பிணைக்கப்பெற்ற சாதனம். சகிக்கமுடியாத சாவுதான் நட்பை அறுக்கிறது.

நன்கு பழகிப் பிணைந்த நட்பையும், இன்பமளிக்கும் செல்வத்தையும் தீரர்களின் பகைமையையும் மரணம் ஒரே வெட்டில் அறுத்துவிடுகிறது.

## ★ பனையன்பர் வருவார் ★

பனையன்பர், பனைச்சம்பந்தர் என்று நாம் செல்லமாக வழங்கும் தமிழ்நாட்டுப் பனையபிவிருத்தி, பனம்பொருள் அபிவிருத்தி நிபுணர் உயர்திரு கே. சம்பந்தம் அவர்கள் மில்க்வைற் தொழிலதிபருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இலங்கைக்கு வருகைதந்து பனைசம்பந்தமாக ஆலோசனை கூறவும் எங்கள் எல்லோரையும் பார்த்துப் போகவும் சம்மதந்தெரிவித்துள்ளார்.

திரு. சம்பந்தம் அவர்களின் அநுபவங்களையும் கருத்துக்களையும் தமிழ் நாட்டுப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் புத்தக வடிவிலும் சஞ்சிகை வடிவிலும், துண்டுப் பிரசுரவடிவிலும் வெளியிட்டுப் பரப்பிப் பயன் செய்து வருகிறது. சம்பந்தம் அவர்களின் அயரா முயற்சியால் வெளிவந்த நூல்களில் ஒன்று ''இனிக்கும் பதநீர்'' என்பதாகும். இனிக்கும் பதநீரை அவர் தமிழ் நாட்டின் தேசியப் பானம் என்று பெருமையோடு எழுதியுள்ளார். இன்னும் ''பனைத்தொழில்'' என்னும் பாரிய நூலையும் ''பனையும் பயனும்'' என்னும் நூலையும், ''பனஞ்சீனி'' என்னும் நூலையும் ''பரக்குன்னு பனை ஒத்தி திட்டம்'' என்னும் நூலையும் பதினையாண்டுகளுக்கு முன்னரே பல பதிப்புக்களில் வெளியிட்டுள்ளார்.

திரு. சம்பந்தம் அவர்கள் காந்திய வழி வந்த பெரியவர்களின் பாராட்டைப் பெற்றதோடு, பல்கலைக்கழகங்கள் சார்ந்த பேராசிரியர்கள் மதிப்பிற்கும் பாத்திரரானவர். அவர் மகாராட்டிர மாநிலத்து தகனு பாரதிய பனைவெல்ல சில்ப பவனம் என்னும் பாரிய நிறுவனத்தின் பொறுப்புவாய்ந்த இயக்குநராயும் பணிபுரிந்தவர். பனைச் செல்வம் என்னும் திங்கள் ஏட்டில் சம்பந்தம் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அதிகமுண்டு.

இலங்கையில் இணையில்லாத பனை நாடு என்னும் வடபிரதேசத்தில், சிறப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிலும் யாழ்ப்பாணக் குடா நாட்டில் எங்கள் இயற்கைவளம் பனைவளம் என்பதை எம்முன்னோர் கண்டு பனையை நம்பி வாழ்ந்தனர். ஒரு பனம் பழம் பறிபோனபோது பெரும் போர் நிகழ்ந்த சந்தர்ப்பமும் எங்கள் பிரதேசத்தில் நிகழ்ந்தது. பனையை வளர்ப்போம் என்று நீங்கள் பாடசாலைப் பச்சிளம் பாலர்கள் முன் சொல்லிப்பாருங்கள் அவர்கள் உடனே பயனைப் பெறுவோம் என்று ஒரேகுரலில் கூறுவார்கள். இங்ஙனம் கூறும்படி பழக்கிய மில்க்வைற் தொழிலதிபருக்குக் குழந்தைகள் பிஞ்சுக் கரம் நோவப் பொறுக்கித்திரட்டிய பல்லாயிரம் பனம் விதைகளைக் கொடுத்துப் பயனடைந்துள்ளார்கள். பனை எத்தனை ஆண்டுகளிற் பயன் தரும் என்ற ஆராய்ச்சியிற் பாடசாலைப் பிள்ளைகள் ஈடுபடவில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள், படிப்பகமாகவும், நூல்நிலையங்களாகவும், பாடசாலை அறைகளாகவும், தளபாடங்களாகவும், தண்ணீர்த் தொட்டிகளாகவும், காற்பந்து, கைப்பந்துகளாகவும் உடனடியாகப் பயன் கண்டுள்ளார்கள்.

இலங்கையில் பனையை நம்பி வாழ்பவர்கள் இன்றும் இருக்கிறார்கள். அவர்கள் பனையபிவிருத்திச் சம்பந்தமாக அறிவதற்குச் சம்பந்தம் அவர்களின் வருகை ஒரு வரப்பிரசாதமாக அமையும். அன்றி இலங்கைப் பனைச்சபை யாரும் சம்பந்தம் அவர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக அவரை அரசாங்க முனைப்பில் அழைக்குமாறு பனைச்சபையில் தொழிலதிபர் பிரேரித்தமை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பெற்றதோடு, பனைச்சபையார் அதில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிகிறது. வாழ்க பனைவளம். வளர்க பனையபிவிருத்தி.

## தொழிலதிபருக்குப் பாராட்டு

தென்னிலங்கையில் பாரிய திட்டமாக வளர்ந்து வடக்கு நோக்கிப் படர்ந்து வருகின்ற சர்வோதய சிரமதான சங்கத்தலைவர் திரு. ஏ. ரி. ஆரியரத்தின 10-10-1981 ஆம் நாள் யாழ் செயலகத்தில் மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்கள் தனியொருவராய்ச் சர்வோதய சேவை செய்து வருகின்ற சிறப்பை வியந்து பேசினார். அன்னார் வரவை நினைவுகூரும் முகமாகத் தொழிலதிபர் செயலகவளவில் நெல்லி மரம் நாட்டிக் கௌரவித்தார்.

★ பெற்றோர் வீட்டில் சொல்வதைப் பிள்ளை தெருவில் சொல்லும் ★



# பனைமரம் பாடுகிறது

கவிஞர் எஸ். டி. சுந்தரம் அவர்கள்
எம். எல். சி. தமிழ்நாடு

1. கற்பனையாம் அல்லபெரும்
காசுதரும் நற்பனையாம்
கற்பகமாய் உங்களுக்கு
கண்கண்ட பலன்தருவோம்!
விற்பனைக்கு மட்டுமல்ல
வீட்டில் குழந்தைகளைச்
சிற்பமென வளர்த்திடுவோம்
சீராகும் உம்வாழ்வு.

2. பட்டணத்தில் வாழுகிற
பங்களா வாசிகளும்
இட்டமுடன் இப்போது
எம்பொருளை வாங்குகிறார்
நட்டமில்லை நம்பனையே
நல்லபொருள் என்கின்றார்
செட்டான வாழ்வுக்கு
செல்வம் பனைஎன்பார்

3. நாத்து நடவேண்டாம்
நல்லநீர் விடவேண்டாம்
ஊத்துக்கால் பாசனமும்
உரமும் இடவேண்டாம்
ஆத்துக்கால் வண்டல்மண்
ஆகாரம் ஏதுமின்றி
தூத்தல் மழையின்றித்
தோன்றிடுவோம் மண்மீது.

4. ஆற்றல்மிகு ஆண்டவனார்
அருள்வான் கருணையினால்
தோற்றம் எடுத்துவிட்டோம்
தொல்வான் பனைமரமாய்
கூட்டம் கூட்டமெனக்
காட்டுக் கரைவெளியில்
நீட்டோலை அசைந்தாட
நிற்கின்றோம் உமக்காக.

5. பலகோடி பலன்தரவே
பனைக்குலங்கள் இருக்கின்றோம்
பலம்தேடும் மனிதருக்கு
பயன்தரவே வாழ்கின்றோம்
குலம்வாழக் குடிவாழக்
கிராமத்தின் ஏழைகளின்
நலம்வாழ வேண்டுமெனில்
நம்புங்கள் எம்குலத்தை

6. நெல்வேலிச் சீமையிலே
நாங்கள் வளர்ந்திருக்கும்
நேர்த்திதனைப் பார்த்தவர்க்கு
நாட்டின் நிலைதெரியும்
சீர்த்திமிகு பனைமரத்தின்
சீர்பலவும் தெரிந்தார்க்குக்
கீர்த்தி பலசேர்க்கும்
கற்பகமாம் எங்கள்குலம்

7. நஞ்சைநல் வேலிகளும்
நாலுபல காணிகளும்
புஞ்சைப் புலன்பலவும்
பொருளின்றித் தவிப்பவர்கள்
தஞ்சம்என வருவோரைத்
தயவாகக் காத்தவர்தம்
பஞ்சத்தைத் தீர்த்தருளும்
பனைச்செல்வம் யாமறிவீர்.

8. நல்ல தமிழ்நாட்டில்
நாநூறு லட்சமரம்
வல்லதொரு சைனியமாய்
வலுவாக நிற்கின்றோம்
சொல்லதிகம் பேசுகின்ற
செல்வர்களே எங்களைநீர்
நல்லபடி பயன்படுத்தி
நல்வாழ்வு எய்திடுக.

9. காந்தியப்பன் கருணைதனைக்
கண்டசில நல்லவர்கள்
சாந்திதரும் ஏழைக்கு
சக்திதரும் எமக்குள்ளே
ஒய்ந்திருந்த உண்மைகளை
உலகுக்குச் சொல்லுவதால்
ஆய்ந்துபல சாதனையை
அனுதினமும் செய்கின்றார்.

10. சேர்ந்தபல நன்மைகளைச்
செயலாக்கும் கூட்டுறவில்
சார்ந்தபல வல்லவர்கள்
சரியாகப் பனைமரத்தில்
வாய்ந்தபலன் யாவையுமே
வளர்த்துவிட்டால் கிராமங்கள்
சூழ்ந்தபுதுப் பாரதமும்
சுகம்பெற்று வாழ்ந்திடுமே!

நன்றி - சென்னை மாநிலப் பனைவெல்லக்
கூட்டுறவுச் சம்மேளனம்

## சைவம் சார்ந்த சிங்கள மன்னன்!

நாநூறு ஆண்டுகளுக்குமுன் 1580 ஆம் ஆண்டில் மாயாதுன்னை என்பாரின் மைந்தன் இராசசிங்கன் தானே இலங்கை மன்னன் எனப் பிரகடனஞ் செய்து 1581ஆம் ஆண்டில் சைவ சமயத்தை தழுவினார். அவர் 120ஆண்டுகள் உயிர்வாழ்ந்து, பின்னர் கோனப்பு பண்டா என்பவரால் கடுகணுவையிற் கொலை செய்யப்பட்டார்.

★ சிக்கன வாழ்வு ஆத்மீக வாழ்வுக்கு ஆரம்பமாகும் ★



## ஔவை அருந்தமிழ்

### உழவுத் தொழிலே உயர்த்திப் பாடியது

அந்தக்காலந் தொடக்கம் இந்தநாள்வரை எந்நாட்டவரும் உழவுத் தொழிலையே உயர்ந்த தொழில் எனக் கொண்டாடுவர். ஒருகலம் நெல்விதைத்து ஓராயிரம் கலம் நெல் விளைவிக்கவல்ல உழவர் இருந்த நாடு தமிழ்நாடு; உழவுத் தொழில் செய்பவரை வேளாளன் எனவும் காலாமாள் என்றும் ஔவையார் புகழ்ந்துள்ளார். உழவுத் தொழிலுக்கு ஏர் என்னும் கலப்பையே இன்றியமையாத கருவி, அதை மேழி என்றும் கூறுவர். மேழிச் செல்வம் கோழைபடாது என்பது பழமொழி.

ஒரு கமக்காரனிடம் இரண்டு கலப்பைகள் இருப்பது விரும்பத்தக்கது, அவன் பருவகாலத்தில் விதைப்பதற்குத் தட்டுப்பாடில்லாமல் வீட்டில் விதைநெல் இருத்தல் விரும்பத்தக்கது. அவனுடைய வயற்காணி அவன் வீட்டுக்கு அண்மையில் இருத்தல் விரும்பத்தக்கது. அந்த வயலுக்கு நீர் பாய்ச்சுவதற்கு வேண்டிய நீர்நிலையும் வசதியாய் இருத்தல்வேண்டும். அவன் வயற் செய்கைக்கு உதவிசெய்யும் தொழிலாளர் கீழ்ப்படிவுள்ளவராய் இருத்தல்வேண்டும். இத்தகைய வசதிகள் யாவும் குறைவற இருக்குமாயின் உழவுத்தொழிலே இனிது என்று ஔவையார் பாடினர்.

ஏரு மிரண்டுளதா யில்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய்—ஊருக்குச்
சென்று வரவணித்தாய்ச் செய்வாருஞ் சொற்கேட்டால்
என்று முழவே இனிது.

## மில்க்வைற் பண்ணை

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம் வெறும் கைத்தொழிலகம் மாத்திரமல்ல. அது ஒரு விவசாயப் பண்ணையும் நாற்றங்காலுமாகும். நாற்றங்கால் என்னும் போது இங்கே வேலைபார்க்கும் பலவகை உத்தியோகத்தரையும் குறிக்கின்றோம். இங்கே வேலை பழகிய பலர் பல்வேறிடங்களில் மதிப்புக்குரிய வேலை வாய்ப்புக்கள் பெற்று நல்ல இடங்களில் பொருளீட்டிப் பெருக வாழ்கின்றார்கள். அண்மையில் மில்க்வைற் தொழிலகத்தில் விற்பனைப் பிரதிநிதிகளிலொருவராகப் பணிபுரிந்த திரு. தயாளன் அவர்கள் இலங்கை வங்கியில் வேலைபெற்றுள்ளார். இவரின் பழைய காலச் சேவையைப் பாராட்டி, இவரின் எதிர்காலம் சுபீட்சமாக வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

## பாரத நாட்டில் பனையபிவிருத்தி

உணவுப் பற்றாக்குறையை உடனடியாக நீக்குகிறது. குமரப்பாபுரப் பனையபிவிருத்தி குவலயம் போற்றவுள்ளது. பரக்குன்னு பனையடருமுறை பாரில் முதன்மையானது. பனையேறப் புதுவழியைப் பாலரும் பழகலாம். பனங்களிவுகளைப் பொன்னாக்கும் புதிய திட்டம், கருப்பநீர் விநியோகம் காசிக்கே புதியமுறை. கண்பார்வை பெறுவதற்குக் கருப்பநீர் மருந்தாகும். கண்நோய் நீக்கவல்ல கருப்பநீர் ஔடதம். கருப்ப நீரைப்போல் கைத்தொழிற்கு மூலம் இல்லை. மலையாள நாட்டாரும் பனைமாண்பை அறிந்துள்ளார். பஞ்சாப்பிரதேசம் பனையபிவிருத்தி செய்கிறது. குடிசைத் தொழில் வளர்க்கும் குமரப்பாபுரம் வாழ்க. பனந் தொழில் ஆதிவாசிகளுக்கு வரப்பிரசாதம் பனஞ்சீனித் தொழிற்சாலை பயன் தரும் உத்திரப் பிரதேசம் ஆந்திர மாநிலத்தில் அரிய கூட்டுறவுமுறை வங்காள மாநிலத்தில் வகை வகையாய்ப் பனந்தொழில் ஒறிசா மாநிலத்தில் ஓய்வில்லா உழைப்புவகை.

## உங்களுக்குத் தெரியுமா?

1. மறைமலை என்பவர்.
2. தமிழ்த்தென்றல் என்பவர்.
3. சொல்லின் செல்வர் என்பவர்.
4. தங்கத்தாத்தா என்பவர்.
5. வித்துவ சிரோமணி என்பவர்.
6. ஈழகேசரி என்பவர்.
7. கங்காரு என்பதன் பொருள்.
8. காசிவாசி என்னும் ஈழத்தவர்.
9. தருக்ககோடரி என்பவர்
10. தசாவதானி என்னும் ஈழத்தவர்.
11. கல்லடி வேலன் என்பவர்.
12. ஆளுடைய பிள்ளை என்பவர்.
13. ஆளுடைய அரசு என்பவர்.
14. இராஜாஜி என்பவர்.
15. இரும்பு மனிதர் என்பவர்.
16. அரைநிர்வாணப் பக்கிரி என்பவர்.
17. வங்கத்தாத்தா என்பவர்.
18. பாரதிதாசன் என்பவர்.
19. பிரான்சிஸ் கிங்ஸ்பரி என்பவர்.
20. கலாவிநோதர் என்பவர்.

(விடை 8-ம் பக்கம்)

### உலகமொழிகள்

உலகில் 3076 மொழிகள் வழங்குகின்றன. ஆனால் மிகமுக்கியமானவை சீனம், ஆங்கிலம், ஜேமன், பிரெஞ்ச் ஸ்பானிஸ், ரஷியன் என்பனவாம்.

★ திருந்த வழியில்லாதவர் வாழ வழியில்லாதவராவர் ★




## நோயில்லா நெறி

[யாழ்ப்பாணத்தில் பிரபல மருந்துக்கடை சுந்தரம் சகோதரர் தந்துதவிய பழைய நூலொன்றைப் படிக்கும் போது எடுத்த குறிப்புகள் சில.]

எங்கள் சமய குரவர்களும் வைணவ ஆழ்வார்களும் தங்கள் நித்திய ஒழுக்கங்களில் நியமங்களில் கண்ட முறைகள் நோயில்லா நெறியாகும். தமிழ் நாகரிகத்தில் கண்ட சுகாதார முறைகள் உணவு முறைகள், சித்த வைத்தியர் சொன்ன நோயணுகாவிதிகள் முதலியவற்றை நம்மவர் சரிவரக் கடைப்பிடித்தல் அவசியம். நகரங்களுக்கிடையில் நுரையீரல் எனத்தகும் சோலைகள் அவசியம். தெருவோரங்களிலும் சந்திகளிலும் மரங்களை நட்டுண்டாக்குதல் தருமப்பணி என்பதோடு அத்தியாவசிய சேவையுமாகும். சத்துவகுணத்தை உண்டாக்கும் உணவு முறைகளை நம்மவர் நன்கு பழகுதல் வேண்டும். மந்தமில்லாப் பொருள்களை உண்ணல் நல்லது. பகலில் உண்ணவேண்டியவற்றை இரவில் உண்ணலாகாது. பசுப் பால், இளங்காய்கறிகளோடு அன்னம், பழங்கள் என்பன இரவுக்கேற்ற உணவுகள். புதுநெல்லரிசி சமியாக் குணம் பேதி முதலியவற்றை உண்டாக்கும் என்பர். மிளகாய் வெப்பத்தை அதிகரிக்கும். சோளம் சரும நோயை உண்டாக்கும். கொத்துமல்லி வெப்பத்தைத் தணிக்கும். வேர்க்கடலையுடன் கரும்பு வெல்லம் சேர்த்து உண்ணுதல் நல்லது. நாட்டுப் பசுப்பாலின் நன்மையை நாம் மறந்து வருகிறோம். வீட்டுக்கொரு நாட்டுப் பசுவை விரும்பி வளர்த்தல் நல்லது. வீட்டில் பசு வளர்ப்பவர்களுக்கு வீட்டுக்கொல்லையில் பலவினப் புல் வளர்ப்புக்கு மில்க்வைற் தொழிலதிபர் புல் கட்டைகள் இலவசமாக வழங்கினர். ஆல் அரசு, வேம்பு, பாதிரி விளா இலந்தை முதலிய மரங்களின் நிழல் எமக்கு இல்லாது போய்விட்டது. மரநிழலில் பிள்ளைகள் விளையாடுவதற்கு வசதியில்லாது போயிற்று.

சுமார் 12500 குடும்பங்கள் நோயின்றி வாழக்கூடிய இடத்தை நகரம் என்பர். நகரத்தில் தெருக்கள் சுத்தமாயும் வீடுகள் தூய்மையாயும் கோயில்கள் குளங்கள் கடைகள், பள்ளிகள் மன்றங்கள் முதலியன அமைந்தும் இருக்கும். நகரங்கள் பெரும்பாலும் கோயிலைச் சுற்றியே அமையும். கோயிலில்லாவூரிற் குடியிருத்தலாகாது. நீர் வளம் நிலவளம் போக்கு வரத்து வசதிகள் அமைதல் வேண்டும். நகரங்களை அமைத்தவர்கள் விதிகளை அநுசரித்துள்ளதாக அறியக்கிடக்கிறது.

"தென்ன ரன்பினி லகப்படு சித்தர்தா முன்னர்ச்
சொன்ன வாதிநூல் வழிவரு சார்புநூற் றொடர்பால்
நன்ன ராலய மண்டபங் கோபுர நகரம்
இன்ன வாறுசெய் யெனவகுத் திம்மெனமறைந்தார்"

ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்லும் பாதைகளில் இருபுறங்களிலும் நிழலைத்தரும் ஆல், வேம்பு, இலுப்பை, நாவல், மா, நெல்லி, அரசு, அசோகு, வாகை போன்ற மரங்கள் வளர்க்கப்பெற்றன. மூன்று தெருக்கள் சந்திக்கும் அந்தி அல்லது முச்சந்தி என்றும், நான்கு தெருக்கள் சந்திக்கும் இடம் சதுக்கம் அல்லது நாற் சந்தி என்றும் பெயர் பெற்றன. அங்கெல்லாம் மா, குருக்கத்தி முதலிய மரங்கள் நின்றன என்பர். சூதமாதவியே புறஞ்சூழ்வன என்பது பாடல்.

நீரகம் பொருந்திய ஊரகத்திரு என்றதுபோல ஊருக்குக் குளங்கள் உறுதுணையாயிருந்தன. குடிப்பதற்கு நீர் கொடுப்பது ஊருணி எனப்பட்டது. குளத்துக்கருகில் கோயிலும் சோலையும் இருந்தன.

உங்களுக்குத் தெரியுமா?

## விடைகள்

1. வேதாசலம் என்னும் மறைமலை அடிகள்.
2. திரு. வி. க. என்னும் கலியாணசுந்தர முதலியார்.
3. பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளை.
4. நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.
5. நாவலரின் மருகர் ந. ச. பொன்னம்பலபிள்ளை.
6. சேர் பொன்னம்பலம் இராமநாதன்.
7. எனக்குத் தெரியாது என்பதாகும்.
8. குப்பிழான் செந்திநாதையர்
9. தம்பு என்னும் திருஞானசம்பந்தப்பிள்ளை.
10. நா. கதிரைவேற்பிள்ளை.
11. வசாவிழான் வேலுப்பிள்ளை,
12. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.
13. திருநாவுக்கரசு நாயனர்.
14. இராசகோபாலாசாரியார்.
15. வல்லபாய் பட்டேல்.
16. மகாத்மா காந்தியடிகள்.
17. இரவீந்திரநாத் தாகூர்.
18. கனக சுப்புரத்தினம்.
19. தா. அழகசுந்தரம்.
20. கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி.


## பலாவும் பனையும்

தென்னிலங்கையில் பலா மரந்தறிப்பதற்குத் தடை நிலவும் வகையில் வடக்கில் பனை பாதுகாக்கப்பட வேண்டும் என்பது பனைச்சபை இயக்குநர் தொழிலதிபர் கனகராசா அவர்களின் ஆசை.

## வீட்டுத் தோட்டம்

மாணக்கர், மாணக்கியர் பாடசாலைத் தோட்டம் செய்தல் வேண்டும் என்று பலகாலமாகக் கல்விபதிகாரிகள் பாடுபட்டுவந்தார்கள். இடையிடை அவர்கள் சற்று நிருபம் நிறைவேற்றப் படாமல் போவதும் உண்டு. ஆனல் இன்று எல்லோரும் வீட்டுத் தோட்டம் செய்வதில் விருப்பமும் ஆர்வமுங் கொண்டுள்ளார்கள். அவர்களை ஊக்குவித்துப் பலவிதமான மரக்கறி விதைகளை விநியோகித்து வரும் தொழிலதிபருக்கு நன்றி கூறுகிறார்கள்.

★ பிறப்பின் நோக்கத்தை அறியாமலே பலர் இறக்கின்றார்கள் ★



## Great Sayings

Swami Sivanandar

1. When you have nothing to say, say nothing.
2. Justice is truth in action.
3. Sweet is the pleasure after pain.
4. All for one, one for all.
5. No man can be wise on an empty stomach.
6. Deeds are the pulse of time.
7. Every hero becomes a bore at last.
8. The first wealth is health.
9. Fear always springs from ignorance.
10. Nothing can bring you peace but yourself
11. Experience is an arch to build upon.
12. It is always in season for old men to learn.
13. It is easy to be brave from a safe distance.
14. Fine feathers only don't make fine birds.
15. Gratitude is the sign of noble souls.

## கேட்பாரின்றிக் கெட்டொழிகிறது

கேட்பாரின்றிக் கெட்டொழிந்து வரும் மூலவளத்தில் மிகமுக்கியமானது காட்டு வளம். ஒருநாட்டில் நாலிலொரு பகுதி நிலப்பரப்பாயினும் காடடர்ந்து இருத்தல் வேண்டும் என்பதை நாம் மறந்துவிட்டோம். நாள் தோறும் காடுவெட்டப்பட்டு வெறும்நிலமாவதில் பல கேடுகள் பின் தொடர்கின்றன. வீதிகள் அகலிப்போர், மின்கம்பிகளைப் பாதுகாப்போர், விறகுவிற்போர், மர மரிவோர், குடியேற்றம் செய்வோர், வீடுகள் அமைப்போர் என விதம் விதமான போர்வைகளில் காடுகளை அழிக்கிறார்கள்.

மரம் நாட்டும் பணியினை மந்திரிமார் முதல் பொது மக்கள்வரை உடனடியாகப் பெருமளவில் செய்து வரா விட்டால் இலங்கையில் வனாந்தரங்கள் உருவாகிவிடும் என்பதை அறிந்தும் மரம்நாட்டத் தவறுகிறோம். காலந் தோறும் அங்கும் இங்குமாக நாம் நாட்டும் மரங்கள் போதா. அகன்ற முறையில் மரம் நாட்டுவதற்கு ஆவன செய்வோம்.

### வளரும் மலைச்சிகரம்

ஐரோப்பாவில் உள்ள உயர்ந்ததும் நீளமானதுமான அல்ப்ஸ் மலைத்தொடரின் சிகரங்கள் ஆண்டு தோறும் ஆறு மில்லி மீற்றர் மேல் நோக்கி வளர்கின்றன என்று அவதானித்துள்ளார்கள்.

## யாவர்க்குமாம்

யாவர்க்குமாம் என்றால் எல்லோராலும் செய்யக் கூடியது, எல்லோருக்கும் இயல்பானது, எல்லோரையும் வாழவைப்பது எல்லோருக்கும் ஏற்றது என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். யாவர்க்குமாம் எனப் பாடத் தொடங்கியவர் திருமூலநாயனார். எல்லோரும் வாழ வேண்டும் என்னும் கருத்தில் ஆங்கிலேயராய றஸ்கின் எழுதிய நூல் மகாத்மாகாந்தியடிகளின் சர்வோதயத் துக்கு வித்திட்டது.

இமய ஜோதி சிவானந்தகுரு எல்லோருக்கும் இயன்றளவாக இன்னா செய்யாமை, உண்மை, தன்னடக்கம், சேவை, பக்தி, சிரத்தை, சீலம், வாழ்வு, தர்மம், யோக அடிப்படை, அமைதி, அன்பு, நன்மை முதலியவற்றைக் கூறியுள்ளார்.

★ ★ ★

உலகமளாவிய ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பற்றிய உடன்படிக்கை நிரலில் இருபத்தைந்தாம் வாக்கியம் இவ்வாறு கூறுகிறது. உணவு, உடை, உறைவிடம், சுகாதாரம் ஆகியவற்றின் பாதுகாப்புடன், தனதும் தன் குடும்பத்தினதும் சீவியத்தின் சுகம்பெறவும், தொழில் பற்றாக்குறை நோய்கள், விதவையாதல், வயோதிப மடைதல், போன்றவற்றால் யாதும் செய்ய முடியாத காலத்தில், வாழ்க்கை சிரமமானதாக இருக்கும்போது பாதுகாப்பைப்பெற ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரிமை உண்டு.'' இவ்வமைப்பு, தென்னிலங்கையில் சர்வோதய சங்கத்தால் நடைமுறைப்படுத்தப் பெற்று வருகிறது.



## Let us think of Gautama Sakya Muni

Lord Buddha sought 2525 years ago to open our best eye, the eye of compassion. Through this eye we can see what, without it, is hidden from us the oneness of all life.

I and you and he or she are separate; but, Lord Buddha taught that we see ourselves in others and others in ourselves whenever we open our hearts in compassion. We are blind when we burden our hearts. The tear laden eye of compassion sees what the rishis wanted us to see. This was the way to Truth and beautitude.

It is when we do not exercise compassion, the greatest heritage of man, that we beome blind and the world is lost in darkness. Selfishness is blind.

(Courtesy: Rajaji)

★ மனிதர் உயர்வதும் தாழ்வதும் தம் செயல்களாலேயே ★

## நவராத்திரி காலம்

சென்ற நவராத்திரி காலம் பிரதமை தொடக்கம் தசமிவரை மில்க்வைற் தொழிலகத்தாருக்கும் தொழிலதிபருக்கும் முயற்சியுள்ள நாட்களாகவும் சேவைப்பணி நிறைந்த நாட்களாகவும் அமைந்தன. ஆயிரக்கணக்கான ஏடுகள் தயாரித்தமை, பலவின மரக்கன்றுகளை நாற்றங் காலினின்றும் பெயர்த்துப் பொலித்தின் பைகளில் வைத்தமை, பிரசுரங்கள் பலவற்றையும் ஒழுங்காக விநியோகித்தமை தொழிலாளரின் அரிய சாதனையாகும். அவர்கள் பகலிரவாகப் பணிசெய்யாதிருந்தால் பல்லாயிரம் ஏடுகள் இலங்கை முழுவதும் பரவலாக விநியோகம் பெற்றிருக்கமாட்டா.

நவராத்திரி நாட்களை மரம்நாட்டும் பணியில் கழித்த தொழிலதிபர் முதல்நாளில் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தில் பலமரங்களை நாட்டுவதற்கு வசதி கிடைத்தது. கல்விப்பணிப்பாளர் திரு. சிவநாதன் அவர்களுக்குப் பக்கபலமாகப் பிரதம கல்வியதிகாரிகள் ஜனுப் மன்சூர் அவர்களும், திரு. சபாநாதன் அவர்களும் பொறுப்பாக இருந்தார்கள். அவ்வமயம் அங்கே வந்திருந்த கொழும்பு கல்விப்பணிப்பாளர் திரு. சண்முகநாதன் அவர்களும் உதவியாக நின்று ஊக்கமளித்தபோது, யாழ்ப்பாணப் பல்வேறு பிரிவுகளின் கல்வியதிகாரிகளும் மரங்கள் நாட்டிப் பணிபுரிந்தார்கள்.

## நூலகங்கள், படிப்பகங்கள் பாலர் பாடசாலைகள்

குடாநாட்டின் பல்வேறு பிரிவுகளில் வாழும் சேவை மனப்பான்மை வாய்ந்த தொண்டர்கள் தங்கள் தங்கள் பகுதிகளில் நூலகங்கள், படிப்பகங்கள், பாலர் பாடசாலைகள் அமைப்பதற்கு நவராத்திரி நாட்களை வாய்ப்பாகக் கொண்டதோடு, மில்க்வைற் தொழிலதிபரையும் பணி செய்ய வாய்ப்பளித்தமைக்கு அவர் நன்றிகூறுகின்றார்.

### குளங்கள் ஆழமாக்கப்படவில்லை

வரண்ட பிரதேசங்களில் காலந்தோறும் வற்றிப் போகும் குளங்களைக் காலத்துக்குக் காலம் பொருக்கு அகற்றி ஆழமாக்கினால் இரண்டு நன்மைகள் உண்டாகும். குளத்தில் அதிகநீர் நிறைந்து நீண்டநாள் பயன்தரும். அகற்றப்பட்ட குளப்பொருக்கு வயல்களுக்கு நல்ல பசளையாய் நல்ல விளைவைத்தரும். இவ்விரு நன்மைகளையும் நம்மவர் போதிய அளவுக்குச் செய்யவில்லை என்று வழக்கமாக மண்வெட்டிகள் தாச்சிச்சட்டிகள் கொடுத்துதவும் மில்க்வைற் தொழிலதிபர் கவலையுற்றார்.

### சஞ்சலந்தீர்க்கும் சணல்

தோட்டங்களுக்குப் போதியளவு பசுந்தாள் உரமாகப் பயன்படும் சணல் இம் முறை அநேக தோட்டங்களில் விதைக்கப் பெற்றுப் பயன் கொடுத்தமை மகிழ்ச்சிக்குரிய செயல். இம் முயற்சியில் ஈடுபட்ட தோட்டக்காரரைப் பாராட்டுகிறோம்.

### குரக்கன்

இம்முறை நம்மவர் பலர் தங்கள் தோட்டங்களில் குரக்கன் விளைவித்தமை உணவுப் பற்றுக் குறையைப் போக்குவதோடு, குரக்கன் உணவு கொள்பவர்களுக்குப் பெரிய வரப்பிரசாதமாயும் அமைகிறது. குரக்கன் விளைவித்தவர்களுக்குப் பாராட்டும் நன்றியும்.

### மரவள்ளி

மரவள்ளிக் கிழக்கு ஏழைகள் உணவு என்றிருந்த காலம் ஒரு காலம். இன்று அது எல்லோருக்கும் ஏற்ற உணவு. அவித்துத்தின்னவும் கறியாக்கி பொரியலாக்கி உணவிற் கலக்கவும், வற்றலாக்கிவைத்து உணவுப் பண்டங்கள் செய்யவும், உற்பத்திப் பொருள்களுக்கு மூலப் பொருளாக உபயோகிக்கவும் வாய்த்த மரவள்ளி இன்னும் நன்கு விளைதல் வேண்டும். விளைவுசெய்த அன்பர்கள் வாழ்க!

### விருத்தம் படித்தல்

அந்தக் காலத்தில் ஆசிரியர்களும் மாணக்கர்களும் நவராத்திரி நாட்களில் வீடுகள் தோறும் சென்று விருத்தம் படித்துக் கும்மி கோலாட்டம் முதலிய கலைகளில் ஈடுபட்டு உணவு, பணம், பொருள் உடுபுடைவை முதலியன பெற்றுச் சிறப்புற்றனர். இவ்வழக்கம் இலவசக் கல்வி வந்ததோடு அருகிவிட்டது.

இதனை மீளவும் நடைமுறையில் கொண்டுவருவதற்கு வண்ணார்பண்ணை கொண்டலடிப் பிள்ளையார் கோயில் ஊழியர் தருமலிங்கம் அவர்களும், சைவத்தொண்டர் நமசிவாயம் B. A. அவர்களும் முப்பத்தைந்து சிறுவர் சிறுமியரைப் பழக்கியுள்ளார்கள். இப்பிள்ளைகளைப் பாராட்டிப் பரிசுப் புத்தகங்களும் தாளமும் வழங்கிய தொழிலதிபர் கனகராசா அவர்களை ஊரவர் பாராட்டினார்கள்.

### யாழ் வளாகத்தில் மரம் நாட்டு விழா

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளவில் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் சேர் பொன். இராமநாதன் மலைவேம்பு, வேம்பு, தேக்கு முதலிய பயன்தரு மரங்களை நிழலுக்காக நாட்டியதோடு நான்கு பக்கங்களிலும் கிணறுகள் தோண்டி வசதிகள் செய்திருந்தார். பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழகமாகப் பரிணமித்தபோது பாரிய கட்டடங்கள் அமைப்பதற்காகப் பலமரங்கள் நீக்கப்பட வேண்டியதாயிற்று. இன்று இடைவெளிகளில் மலைவேம்பு, வேம்பு முதலிய மரங்களை அழகாகவும் அமைவாகவும் நாட்டுவதற்குப் பல்கலைக்கழகத்தார் மில்க்வைற் தொழிலதிபர் உதவியைக் கோரியமைக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். வாழ்க பல்கலைக்கழகம் வளர்க மரங்களின் தோப்பு.

### தண்டனை

பிறர்சொத்தைப் பறித்தவன், பிறர்முன்னேற்றத்தைக் கண்டு பொறாமையடைபவன், தன் எஜமானுக்குத் துரோகஞ் செய்தவன் கொடிய நோய்களிலிருந்து தப்பமுடியாது.

**ஞாபகசக்தி இல்லாதவர் பொய்கூறலாகாது**

# எங்கள் இராணி உங்கள் இராணி உங்கள் இராணி எங்கள் இராணி

மாட்சிமை தங்கிய இரண்டாம் எலிசபெத் இராணி யாரை மகாராணி என்பது உபசாரம். அவர் பொதுநல வாய நாடுகளுக்குத் தலைவி. பொதுநலவாயத்தில் உள்ள நாற்பத்தைந்து நாடுகள் அவரைத் தலைவி எனக் கருதுகின்றன. இந்நாட்டவர்களுள் ஒருநாட்டவர் மற்றொரு நாட்டவரோடு உறவுமுறை கொள்ளும்போது ''உங்கள் இராணி எங்கள் இராணி, எங்கள் இராணி உங்கள் இராணி'' என்பர். இவ்வாறு கூறும் கருத்துப்பலம் பொருந்திய நாடுகளை ஒன்றுசேர இணைப்பவர் இராணி. எனவே இந்திய சனாதிபதியாயிருந்த கலாநிதி இராசேந்திர பிரசாத் அவர்கள் இராணியை ஒரு பட்டு நாடா என்றார். மென்மையான பட்டுநாடா இத்தனை நாடுகளையும் அரவணைத்துக்கொள்ளும் ஆதரவில் அமைந்துள்ளது. இங்கிலாந்துக்கு அரசியாயிருக்கும் இராணி முடிசூடித் தான் இருக்கிறார். ஆனால் இங்கிலாந்து முடிசூடிய குடியரசுநாடு என்பது மறுக்கமுடியாத உண்மை. என்பு தோல் போர்த்த உடம்பு அல்ல, அவ்வுடம்பில் உள்ள முடியே பிரதானம். முடியோடு செங்கோலும் சின்னங்கள். பாராளுமன்றத்தில் சபாநாயகரின் அரியணையும் அவருக்குமுன் வைக்கப்பெறும் செங்கோலும் சின்னங்கள் பணிவுக்குரியவை, மதத்தலைவர் திருக்கரத்தில் ஏந்தும் கோல் மதிப்புக்கும் வணக்கத்திற்கும் உரியது, மந்தை மேய்க்கும் இடையன் கைக்கோல் என்ன மதிப்புக்குறைந்ததா? இல்லவே இல்லை.

## ஐம்பது ஆண்டு நிறைவு

இராணியார் பேசியபோது இடையில் வேறொரு வைபவத்தையும் நினைவுபடுத்தினர், அதை நம்மவர் பலர் ஒழுக விட்டுவிட்டார்கள், அதுதான் சாரமான பகுதி. அதாவது 1931ம் ஆண்டில் நிறைவேற்றப்பெற்ற உவெஸ்ற்மினிஸ்ரர் நியதிச்சட்டம், அஃது என்னப்பா என்று கேட்டால் பரந்துபட்டிருந்த பிரித்தானியப் பேரரசு நாடுகளில் சுதந்திரம்பெற்ற நாடுகளில் பிரித்தானிய பாராளுமன்றச் சட்டங்கள் செல்லுபடியாகா என்ற பாதுகாப்புச் சட்டம்.

## கொண்டும் கொடுத்தும் வாழ்வோம்

கொண்டும் கொடுத்தும் வாழ்வதற்குப் பொதுநலவாய நாடுகள் 1950ம் ஆண்டளவில் ஆரம்பித்த கொழும்புத்திட்டத்தின் பாரிய உபகரிப்பினால் எம்மவர் வெளிநாடுகளுக்கு எச்செலவுமின்றிச் சென்று தங்கிப் பலதுறைகளில் நிபுணர்களாய்ப் பயிற்சிபெற்று மீண்டுள்ளார்கள்.

---

## சங்கானையில் மாதர் சங்கம்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் செய்துவரும் மக்கள் பணியில், மாதர்பகுதியும் மகத்தாகச் சேவைசெய்கின்றார்கள். உடைகள் தயாரிப்பதில் பெண்கள் கூடிய ஊக்கம் எடுத்துவருவதைத் தொழிலதிபர் பாராட்டிக் கொள்முதல் செய்தார்.

## ஐம்பத்துநாலும் . . . . (4ம் பக்கத் தொடர்)

12. மனைவியிடம் நற்குண நற்செயல்கள் இல்லையாயின் இல்வாழ்க்கை சிறப்படையாது.
13. மனைவி மாட்சிமை உள்ளவளாயின் வீட்டில் இல்லாதது ஒன்றுமில்லை. மாட்சிமை இல்லாவிடின் உள்ளது ஒன்றும் இல்லை.
14. கற்பு என்னும் மனவுறுதி இருந்தால் பெண் பிறவியினும் மேலானது ஒன்றும் இல்லை.
15. தன் கணவனையே தெய்வமாகக் கருதி வணங்குபவள் பெய் என்றால் மழை பெய்யும்.
16. கற்புநிலையில் தவறாது கணவனை உபசரித்துக் குடிப் புகழைப் பாதுகாத்துக் குணஞ் செயல்களை மறவாதவளே பெண்ணுவாள்.
17. மதில் முதலியனவின் காவல் பெரிதல்ல. மனைவி கற்பால் காத்துக்கொள்ளும் காவலே பெரிய காவல்.
18. மனைவி தன் கணவனை நன்கு உபசரித்தால், வானுலகத்தவர் மனைவியை வணங்கி உபசரிப்பார்.
19. புகழைக் காக்க விரும்பும் மனைவி இல்லாதவர்க்கு இகழ்ந்து பேசும் பகைவர்கள் முன் நிமிர்ந்து நடக்கும் நடை இல்லை.
20. மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்று கூறுவர். நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்ல அணிகலம் என்றும் கூறுவர்.
21. ஒருவன் பெறும் பேறுகளுள் பெரிய பேறு அறிவுள்ள நல்ல மக்களைப் பெறுதலேயாம்.
22. நற்குண நற்செயல்களுள்ள மக்களைப் பெறுபவன் ஏழுபிறப்புக்களிலும் துன்பம் அடையான்,
23. தம்முடைய பொருள்கள் எனக் கொள்ளத்தக்கவர் அவரவர் மக்களேயாவர், மக்களுக்குரிய பொருட்கள் மக்களின் வினைப்பயனால் வந்துசேரும்.
24. பெற்றோருக்குத் தங்கள் குழந்தைகள் சிறுகைகளால் தொட்ட உணவே அமிர்தத்திலும் இனிமையுள்ளதாகும்.
25. மக்களின் மேனியைத் தொடுதல் உடம்புக்கு இன்பந் தரும். அவர்களின் சொற்கேட்டல் காதுக்கு இன்பந் தருவதாகும்.
26. தங்கள் குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்டு மகிழாதவர், குழலும் யாழும் இனியவை என்பர்.
27. தந்தை தன்மைந்தனுக்குச் செய்யும் மகத்தான உதவி அவனைக் கல்வியிற் சிறந்தவனுக்கிக் கற்றவர்கள் சபையில் முன்னிலையில் இருக்கச் செய்வதாகும்.
28. நல்லறிவுள்ளவனுய்க் கல்வியிற் சிறந்து விளங்கும் மகனின் பெருமை தந்தைக்கேயன்றி உலகத்தவருக்கே கூடுதலான இன்பம் பயப்பதாகும்.
29. தன்மகன் ஒழுக்கத்தால் உயர்ந்த சான்றோன் என உலகத்தவர் சொல்லக்கேட்ட தாய், அவனைப்பெற்ற நாளில் உற்ற இன்பத்திலும் பெரிய இன்பம் அடைவாள்.
30. மகன் தன் தந்தைக்குச் செய்யும் பிரதியுபகாரம் அவனைப் பெறுவதற்குத் தந்தை என்ன தவம் செய்தாரோ என்று உலகத்தவர் கூற நடப்பதாகும்.

---

★ படிப்பு, உழைப்பு, அபிலாசை முன்னேறச் செய்யும் ★



## வெள்ளிவிழாக் கண்ட விற்பனைப் பிரதிநிதி

மில்க்வைற் தொழிலகத்தில் திரு. வேல்சாமி என்றால் நாடுமுழுவதும் நன்கறிந்த ஒருவர். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் சாதாரண விளம்பர உத்தியோகத்தராகச் சேர்ந்த இவர் தமது அயரா உழைப்பு, விடாமுயற்சி, வாக்கு வன்மை, ஒத்துழைப்பு, பணிவு முதலிய நற்பண்புகளால் உயர்ச்சியடைந்து இன்று. பிரதம விற்பனைப் பிரதிநிதியாகப் பெரும் பொறுப்புள்ளவராய்க் கடமை ஆற்றுகிறார்.

மில்க்வைற் தொழிலதிபர், தொழிலாளர், நண்பர்கள் முதலியோருடன் தான்கொண்ட நீண்ட காலப் பழக்கத்தில் அவர்களைச் சிறப்பிப்பதற்கு இவர் தமது இல்லத்தில் மதியபோசன விருந்துகொடுத்து மகிழ்ந்தார். இவர் என்றும் நம்பிக்கையும் விசுவாசமும் ஊக்கமும் உள்ள பொறுப்பாளியாக இன்னும் பல்லாண்டுகள் சேவைசெய்ய இறைவன் திருவருள் பாலிப்பாராக.

## பௌராணிகர் கார்த்திகேசு

வைமன் வீதி பண்டிதர் கார்த்திகேசு அவர்கள் கந்த புராணம் படிப்பதிலும், திருமுறை ஓதுவதிலும் தமது இளைப்பாறிய காலத்தைப் பயன்செய்வதோடு சைவத் தீட்சை வைப்பதற்கும் பணிசெய்துவருகிறார். இன்னும் மரம் நாட்டும் பணிக்கும் நிழல்மரங்களை உண்டாக்கி அன்பளிப்புச் செய்துவருகிறார்.

## உலக உணவுதின விழா

பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலையத்திலும் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியிலும் 16-10-81 வெள்ளிக்கிழமை நடைபெற்ற உலக உணவுதின விழாவிற் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மில்க்வைற் தொழிலதிபர் அங்கு சிறப்புரையாற்றி மரம் நடுகைக்கான பல கன்றுகளை வழங்கியமையை விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்களும் பிறரும் பெரிதும் பாராட்டினர்.


## நீம் சுகாதார தூபம்

மழைக்காலத்தோடு நுளம்பும் இலையானும் அதிகமாகப் பெருகி உபத்திரவம் தருகின்றன. இவற்றைப் போக்குவதோடு வீடுகளுக்குப் புனிதத்தையும், கணகணப்பையும் லட்சுமி கடாட்சத்தையும் உண்டாக்கும்.




'மில்க்வைற்' நீம் சுகாதார தூபத்தை தணலில் இட்டுப் புகைத்துப் பாருங்கள்.
எவரும் வாங்கக்கூடியதாக
25 சதம் பெறுமதியான பைகளில் உண்டு.


## அரியாலையில் பெரிய மரம்நாட்டு விழா

அரியாலையிலுள்ள அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் அபிமான விழாவாக அங்குள்ள மயான வளவில் பெரிய அளவில் மரம்நாட்டும் பணி நடைபெற்றது, நிழல் தரும் மரங்களும் பனம்விதைகளும் நாட்டப்பெற்றபோது மில்க்வைற் தொழிலதிபரோடு பனைச்சபையினரும் பங்குபற்றினர். மரம்நாட்டும் பணியைச் சிறப்பித்து, மெல்லிசை வித்துவான் றமேஸ் வைகுந்தவாசன் இன்னிசைக் கச்சேரி செய்து எல்லோரையும் மகிழ்வித்தார்,

## சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவு மகளிர் சங்கம்

தமிழ்ப்பிரதேசமெங்கும் மாதர்பலர் சமூகப்பணி செய்வதற்கு முன்வந்துள்ளமைபோல சாவகச்சேரி மகளிரும் சங்கத்தாபனையில் பணிபுரிவதை மில்க்வைற் தொழிலதிபர் பாராட்டி ஊக்கப்படுத்தினார்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-11-81.